2014 ஜூலை 14]

122—

பறிமுதல் செய்தல்

*4653—**திரு. ஆர். சுந்தர்ராஜன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடைகளில் விற்கப்படும் ஐஎஸ்ஐ. முத்திரை பொறிக்கப்படாத தரமற்ற மின்சாரப் பொருட்களைப் பறிமுதல் செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாநிலம் முழுவதும் அதிகாரம் பெற்ற அலுவலர்களால் திடீர் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஐஎஸ்ஐ. முத்திரை இல்லாத தரமற்ற மின் பொருட்களை விற்பனைக்காக கடைகளில் இருப்பு வைத்திருப்பது கண்டறியப்பட்டால், அவை பறிமுதல் செய்யப்படுகின்றன. பறிமுதல் செய்யப்படும் நிறுவனங்கள்மீது குற்றவியல் நடவடிக்கையின்படி நீதிமன்ற வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. இவ்வாறு கடைகளில் விற்கப்படும் ஐஎஸ்ஐ. முத்திரை பொறிக்கப்படாத தரமற்ற மின்சாரப் பொருட்களைப் பறிமுதல் செய்ய தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள்.*

திரு. ஆர். சுந்தர்ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்மனத் தலைவி, தங்கத் தாரகை, காவேரி கண்ட தாய், பொன்னியின் செல்வி தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் எல்லாம்; மற்றவர்கள் எல்லாம் சும்மா, (மேசையைத் தட்டும் ஒலி) தனித்து நிற்க திராணி இல்லாதவர்களை எல்லாம் மக்கள் தூக்கியெறிகின்ற காலம் வெகுதூரத்தில் இல்லை. தமிழகத்தின் நிரந்தர முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதைக் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

ஐ.எஸ்.ஐ. முத்திரை இல்லாத தரமற்ற பொருட்களை விற்பனை செய்யும் கடைகளில் பொருட்களைப் பறிமுதல் செய்ய அரசு ஆவன செய்யுமா எனக் கேட்டுக்கொள்கிறேன். தரமற்ற பொருட்களை விற்பதால் பெருத்த உயிர் சேதமும், பொருட்சேதமும் ஏற்படும் என்பது நாம் அறிந்த உண்மை. எனவே, தரக் கட்டுப்பாட்டுச் சட்டத்தைக் கடுமையாக்க அரசு ஆவன செய்யவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் மின் கம்பிகள், கம்பி வடங்கள், உபகரணங்கள், பாதுகாப்பு பொறியமைப்புகள் மற்றும் துணைக் கருவிகள் (தரக்கட்டுப்பாடு) ஆணை, 2013-ல் உள்ள விதிமுறைகளின்படி, தொழில் வணிக இயக்குநரகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள திருவான்மியூர் விக்ரம் சாராபாய் தொழிற்பேட்டையில் அமைந்துள்ள தரக்கட்டுப்பாடு ஆணைய செயலாக்க மையம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதிலே, 15 வகை மின் சாதனங்களுக்கு ஐ.எஸ்.ஐ. முத்திரை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஐ.எஸ்.ஐ. முத்திரை இடப்படாத மின் சாதனங்களை விற்பவர்கள்மீது பி.ஐ.எஸ். சட்டம் 1986-ன்படி, ரூ.50,000/- அபராதம் விதிக்கவும் அல்லது ஒரு வருடம் சிறைத் தண்டனை வழங்கவும் அல்லது இரண்டையும் சேர்த்து தண்டனையாக வழங்கவும் அரசு பல்வேறு வகைகளில் நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. அந்த வகையிலே, மத்திய அரசினுடைய இந்தச் சட்டத்தைத் தமிழ்நாடு அரசுதான் முறையாக, சிறப்பாக இந்த மூன்று ஆண்டுக் காலத்தில் செயல்படுத்தி வருகிறது.

முற்பகல் 10-25

கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் தமிழ்நாட்டில் 183 மின் சாதன விற்பனைக் கூடங்களில் ஐ.எஸ்.ஐ. முத்திரை பெறாமல் விற்பனைக்காக இருப்பு வைக்கப்பட்டிருந்த 7,90,665 ரூபாய் மதிப்புள்ள 4,163 மின் சாதனப் பொருள்கள் கண்டறியப்பட்டுள்ளன. அவை பறிமுதல் செய்யப்பட்டு விற்பனையாளர்கள்மீது நீதிமன்றங்களில் வழக்குகள்

தொடரப்பட்டும், தர நிர்ணய அமைவன சட்டம் 1986-ன்கீழ் தீர்ப்புகள் பெறப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மேலும், மதுரை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், இந்த மூன்று ஆண்டுகளில் எட்டு மின் சாதன விற்பனைக் கடைகளில் ஐஎஸ்ஐ. முத்திரை பெறாமல் விற்பனைக்காக இருப்பு வைக்கப்பட்டிருந்த ரூ.30,660/- மதிப்புள்ள 85 மின் சாதனப் பொருட்கள் கண்டறியப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 123, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

123—

சொந்தக் கட்டடம்

***42372—திரு. கோவி. சம்பத்குமார்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், வெள்ளக்குட்டை ஊராட்சியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், வெள்ளக்குட்டை ஊராட்சியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலருக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மாவட்ட நிருவாகத்தின் அனுமதி பெற்று விரைவில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.*